**அ.வ.எண். 14/2025**
**வா.சா.1 : சதாசிவம்**
**தேதி : 25.02.2026**
**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**
**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

என் வீட்டிற்கும் பிரதிவாதி வீட்டிற்கும் 10 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். நீங்கள் அறிவிப்பில் பிரதிவாதி டிசம்பர் மாதம் 2022–ல் பணம் கேட்டார் என்று கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி டிசம்பர் 2022 ஆம் வருடம் உங்களிடம் எந்த பணமும் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் விவசாயம் மற்றும் சர்வீஸ் ஸ்டேசன் வைத்து தொழில் செய்கிறேன். நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். வருமான வரி கணக்கில் பணம் கொடுத்த விவரம் வராது. நீங்கள் பணம் கொடுக்காததால் தான் வருமானவரிக்கணக்கில் பிரதிவாதிக்கு கொடுத்த பணத்தை பற்றி குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல நான் விவசாயமும், சிறுதொழிலும் செய்து வருகிறேன். பிரதிவாதி 25.01.2023 ஆம் தேதியன்று மட்டும் தான் என் வீட்டிற்கு வந்தார் அதற்கு முன்பாக வரவில்லை. 25.01.2023 ஆம் தேதி பிரதிவாதி காலை 10.00 மணிக்கு என் வீட்டிற்கு பைக்கில் வந்தார். பிரதிவாதியுடன் கந்தசாமி என்பவரும் உடன் வந்தார். வா.சா.2 கந்தசாமி எனக்கு தெரியாது அவரை பிரதிவாதிதான் அழைத்து வந்தார். பிரதிவாதிக்கு வா.சா.2 கந்தசாமி மற்றும் உங்களையும் யாரென்று தெரியாது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி என் வீட்டிற்கு வந்த அரைமணி நேரத்தில் நான் பணத்தை எடுத்து பிரதிவாதியிடம்

கொடுத்தேன். பிரதிவாதிதான் வா.சா.ஆ.1 புரோநோட்டை ஆவணத்தை கொண்டு வந்தார். வேறு எந்த ஆவணமும் கொண்டு வரவில்லை. இதற்கு முன்பாக பிரதிவாதியுடன் எனக்கு எந்த வரவு செலவும் இல்லை. பிரதிவாதியிடமிருந்து புரோநோட் மட்டும் தான் எழுதி வாங்கினேன். ஆதார் கார்டு நகல் எதுவும் வாங்கவில்லை. 25.01.2023 ஆம் தேதியன்று பிரதிவாதி உங்கள் வீட்டிற்கு காலை 10.00 மணிக்கு வந்த போது என் வீட்டில் யாரும் இல்லை நான் மட்டும் தான் இருந்தேன். பிரதிவாதியிடம் பணம் கொடுத்த பிறகு தான் வா.சா.ஆ.1 புரோநோட் எழுதப்பட்டதா என்றால் புரோநோட் எழுதி வாங்கிய பிறகு தான் பணம் கொடுக்கப்பட்டது. வா.சா.ஆ.1 எழுத 10 நிமிடம் ஆனது. தோட்டத்திலிருந்து வந்த பணம், ஆடு குட்டிகள் விற்ற பணம் மற்றும் சர்வீஸ் ஸ்டேசனில் வந்த பணத்தில் தான் 12 லட்சம் பிரதிவாதிக்கு கொடுத்தேன். எந்தெந்த சர்வே எண்ணில் உள்ள தோட்டத்திலிருந்து பணம் வந்தது என்று வழக்குரையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்குரையில் சாட்சிகள் பெயரை குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். 25.01.2023 ஆம் தேதியன்று பிரதிவாதி மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தார் என்றும் உங்களிடம் வா.சா.ஆ.1 எழுதிக்கொடுத்து எந்த பணமும் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி 22.01.2023 ஆம் தேதியன்று இரவு 10.04 மணியிலிருந்து 26.01.2023 அன்று 4.28 வரை கரூர் கோவை ரோடு ஆல்வின் நகர், எண்.163 ல் உள்ள அப்போலோ லோகா

மருத்துமவனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தை நீங்களாக தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.2 கந்தசாமி உங்களுக்கு தெரிந்தவர் என்பதால் அவரை உங்கள் தரப்பு சாட்சியாக காண்பித்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. ஆகையால் தான் எந்த இடத்தில் வைத்து பணம் கொடுக்கப்பட்டது என்று உங்களது அறிவிப்பில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார் என்றும் அவர் வைத்திருந்த பாண்டுகள் தவறிவிட்டது என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு தவறிய பாண்டை வைத்து தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பிய பிறகு பிரதிவாதி உங்கள் மீதும், வா.சா.2 கந்தசாமி மீதும் காவல்நிலையத்தில் புகார் அளித்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. உங்கள் வழக்கு பொய் வழக்கு என்தால் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**குறிப்பு** : இன்று நீதிமன்றத்தில் பிரதிவாதி ஆஜராகியுள்ளார். சாட்சி அவரை சரியாக அடையாளம் காண்பித்துள்ளார்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.25 18:59:20 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.

**அ.வ.எண். 14/2025**
**வா.சா.2 : கந்தசாமி**
**தேதி : 25.02.2026**

**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

வா.சா.1 சதாசிவத்திற்கும் எனக்கும் பழக்கமில்லை. வாதி அழைத்ததின் பேரில் தான் இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 25.01.2023 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு நானும் பிரதிவாதி குணசேகரனும் வாதி சதாசிவம் வீட்டிற்கு சென்றோம். அப்போது வாதி வீட்டில் யாரும் இல்லை. வாதியின் வீட்டிற்கு இருசக்கர வாகனத்தில் சென்றோம். பிரதிவாதிக்கும் எனக்கும் 15 வருட பழக்கம். பிரதிவாதி பிரிண்டிங் பிரஸ் வைத்துள்ளார். பிரதிவாதியின் முழுப்பெயர் குணசேகரன். பிரதிவாதியின் ஆதார் கார்டை நான் வாங்கி பார்த்ததில்லை. 25.01.2023 ஆம் தேதியன்று காலை 10.00 மணிக்கு சென்று அரைமணி நேரம் வாதியின் வீட்டிலிருந்தோம். பிரதிவாதியின் பெயர் குணசேகரன் இல்லை என்றும் குணசேகர் என்றால் நாங்கள் குணசேகரன் என்று தான் அழைப்போம். பிரதிவாதி 25.01.2023 ஆம் தேதி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. அவர் உங்களுடன் வாதி வீட்டிற்கு வருவதற்கான வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி உங்களுக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதி அவரது விவரங்களை சொன்னதாக வழக்கிற்காக சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதி உங்கள் முன்னிலையில் வாதியிடமிருந்து பணம் வாங்கியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி 22.01.2023 ஆம் தேதியன்று இரவு 10.04 மணியிலிருந்து 26.01.2023 ஆம் தேதியன்று மதியம் 4.28 வரையிலும் கரூர் கோவை ரோடு ஆல்வின் நகல் எண்.163 ல் உள்ள அப்போலோ மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

மாவட்ட நீதிபதி,
கரூர்.